


**REVISION TEST BATCH STARTS ON 4/8/24 (SUNDAY)**

**FOR MORE DETAILS : WHATSAPP - 8438233722**

## ஏழாம் வகுப்பு தமிழ் – முழுத்தேர்வு

1.நாமக்கல் கவிஞர் பற்றிய சரியான கூற்றுகளைத் தேர்வு செய்க.
1.வெ.இராமலிங்கனார் நாமக்கல் கவிஞர் என்று அழைக்கப்படுவார்.
2.இவர் காந்தியின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு காந்தியத்தைப் பின்பற்றியதால் காந்தியக்கவிஞர் என்றும் அழைக்கப்படுகிறார்.
3.இவர் தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞர் ஆவார்.
4.மலைக்கள்ளன், என்கதை, துறைமுகம், சங்கொலி முதலிய நூல்களை இயற்றியுள்ளர்.
அ)அனைத்தும் சரி ஆ)1,2,3 மட்டும் சரி
இ)2,3,4 மட்டும் சரி ஈ)1,3,4 மட்டும் சரிஷ

2.“கண்டதில்லை கேட்ட தில்லை
சண்டை யிந்த மாதிரி
பண்டு செய்த புண்ணிய யந்தான்
பலித்த தேநாம் பார்த்திட” - இவ்வடிகளைப் பாடியவர்
அ)பாரதியார் ஆ)பாரதிதாசன்
இ)இராமலிங்கனார் ஈ)உடுமலை நாராயணகவி

3.நாட்டுப்புற இசையின் எளிமையைக் கையாண்டு கவிதைகள் எழுதியவர்
அ)பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார்
ஆ)வெ.இராமலிங்கனார்
இ)இராஜமார்த்தாண்டன்
ஈ)உடுமலைநாராயணகவி

4.மொழியின் உயிர்நாடியாக விளங்குவது எது?
அ)பேச்சுமொழி ஆ)இலக்கணம்
இ)எழுத்துமொழி ஈ)இலக்கியங்கள்

5. ‘எண்ணப்படுவது, நினைக்கப்படுவது, கனவு காணப்படுவது ஆகியவையும் மொழியே ஆகும்’ என்று கூறியவர்
அ)தெ.பொ.மீனாட்சிசுந்தரம் ஆ)மு.வரதராசனார்
இ)ஈராஸ்பாதிரியார் ஈ)கால்டுவெல்

6.ஒரேமொழியின் மாறுபடும் வெவ்வேறு வடிவங்களை இவ்வாறு அழைப்பர்
அ)வட்டாரமொழி ஆ)கிளைமொழி
இ)எழுத்துமொழி ஈ)பேச்சுமொழி

**REVISION TEST BATCH STARTS ON 4/8/24 (SUNDAY)**
**FOR MORE DETAILS : WHATSAPP - 8438233722**

7.செந்தமிழைச் செழுந்தமிழாகக் காண விரும்பியவர் யார்?
அ)பாரதியார் ஆ)நாமக்கல் கவிஞர்
இ)பாரதிதாசன் ஈ)மறைமலையடிகள்

8.அப்படியே நிற்கட்டும் அந்த மரம் - இந்நூலின் ஆசிரியர் யார்?
அ)ராஜமார்த்தாண்டன் ஆ)சே.பிருந்தா
இ)வெ.இராமலிங்கம் ஈ)கண்ணதாசன்

9.பொருந்தாத சொல்லைத் தேர்வு செய்க.
அ)வையம் ஆ)வெளவால்
இ)சமையல் ஈ)பறவை

10.தவறான கூற்றைத் தேர்வு செய்க.
அ)ஐகாரம் சொல்லின் முதலில் வரும்போது ஒன்றரை மாத்திரை அளவில் ஒலிக்கும்.
ஆ)ஐகாரம் சொல்லின் இடையிலும் இறுதியிலும் வரும்போது ஒரு மாத்திரை அளவில் ஒலிக்கும்.
இ)ஔகாரம் சொல்லின் இடையிலும் இறுதியிலும் வராது.
ஈ)மகரமெய்யானது தனது ஒரு மாத்திரை அளவிலிருந்து குறைந்து அரை மாத்திரை அளவாக ஒலிப்பது மகரக்குறுக்கம் ஆகும்.

11.ஆதினி - இச்சொல்லுக்கான சரியான இலக்கணச் சொல்லைத் தேர்வு செய்க.
அ)ஆண்பால் ஆ)பெண்பால்
இ)ஒன்றன்பால் ஈ)பலவின்பால்

12. Parable - இச்சொல்லுக்கான கலைச்சொல் யாது?
அ)உருவகம் ஆ)உரிச்சொல்
இ)உவமை ஈ)பெயர்ச்சொல்

13.கீழ்க்காணும் குறட்பாவின் இறுதிச் சொல்லைக் கண்டறிக.
ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் --------------.
அ)உலகு ஆ)உயிர்க்கு
இ)இயல்பு ஈ)உள

14.உலகத்தார் எல்லோருடைய உள்ளங்களிலும் வாழ்பவராக யாரை திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?
அ)திட்டமிட்டு செலவு செய்பவர் ஆ)பிறரைப் புறங்கூறாது இருப்பவர்
இ)பொறாமையில்லாதவர் ஈ)உள்ளத்தில் பொய் இல்லாதவர்.

15.திருக்குறள் பற்றிய சரியான கூற்றுகளைத் தேர்வு செய்க.
1.தமிழ்நூல்களில் திரு எனும் அடைமொழியோடு வரும் முதல் நூல் திருக்;குறள் ஆகும்.
2.இந்நூல் முப்பால், தெய்வநூல், பொய்யாமொழி எனப் பல்வேறு சிறப்புப் பெயர்களைக் கொண்டது.
3.அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என ஒன்பது பகுப்புகளைக் கொண்டது.
4.திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு 1815.
5.திருக்குறளில் இடம்பெறாத ஒரே எழுத்து ஔ.
அ)1,2,5 மட்டும் சரி ஆ)2,3,5 சரி
இ)2,3,4,5 மட்டும் சரி ஈ)அனைத்தும் சரி

16. “புலிசேர்ந்து போகிய கல்அளை போல
ஈன்ற வயிறோ இதுவே..” இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல்
அ)அகநானூறு ஆ)குறுந்தொகை
இ)புறநானூறு ஈ)ஐங்குநுறூறு

17.தவறான கூற்று எது?
அ)காவற்பெண்டு சங்ககால பெண்பாற்புலவர்களில் ஒருவர்.
ஆ)இவர் சேர மன்னன் போரவைக் கோப்பெரு நற்கிள்ளியின் செவிலித்தாயாக விளங்கியவர்.
இ)இவர் பாடிய ஒரே ஒரு பாடல் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது.
ஈ)இவற்றில் எதுவுமில்லை.

18. ‘வீரப்பேச்சால் எத்தனையோ தியாகிகளையும், விவேகப் பேச்சால் எத்தனையோ அறிவாளிகளையும் உண்டாக்கியவர்’ என்று முத்துராமலிங்கத்தேவரைப் பாராட்;டியவர் யார்?
அ)திரு.வி.கலியாணசுந்தரனார் ஆ)காமராசர்
இ)பெரியார் ஈ)அறிஞர் அண்ணா

19.முன்னாளில் வளமுற்றிருந்த எந்தத் துறைமுகத்தின் வழித்தோன்றலாக தூத்துக்குடி துறைமுகத்தை சிதம்பரனார் புகழ்கிறார்?
அ)பூம்புகார் ஆ)கொற்கை
இ)முசிறி ஈ)தொண்டி

20. “வந்தே மாதரம் என்போம். எங்கள் மாநிலத்தாயை வணங்குதும் என்போம்” என்று பாடியவர்
அ)பாரதியார் ஆ)பாரதிதாசன்
இ)நாமக்கல் கவிஞர் ஈ)வ.உ.சி

21.இந்திய அரசின் சாகித்திய அகாடமி விருது பெற்ற முதல் நூலை இயற்றியவர்?
அ)பாரதிதாசன் ஆ)ரா.பி.சேதுப்பிள்ளை
இ)நாமக்கல் கவிஞர் ஈ)கி.ராஜநாராயணன்

22.நன்காடு என்பது
அ)இலக்கணப்போலி ஆ)மங்கலம்
இ)குழூஉக்குறி ஈ)இடக்கரடக்கல்

23. 'போல இருத்தல்;' என்பதிலிருந்து தோன்றியது
அ)உவமை ஆ)உருவகம்
இ)போலி ஈ)அணி

24.பொருத்துக
இலைஞ்சி – 1.கடைப்போலி
மையல் - 2.இடைப்போலி
ஐந்து – 3.முதற்போலி
முகன் - 4.முற்றுப்போலி
அ)1 4 2 3 ஆ)2 3 1 4
இ)3 2 1 4 ஈ)2 3 4 1

25.கரிகாலன் யார்? – இதில் 'யார்' என்பது
அ)எழுவாய் ஆ)பயனிலை
இ)செயப்படுபொருள் ஈ)வினைமுற்று

26. "உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும் துறை...." இவ்வடியைப் பாடியவர்
அ)மருதன் இளநாகனார் ஆ)கடியலூர் உருத்திரங்கண்ணனார்
இ)வெண்ணிக்குயத்தியார் ஈ)காவற்பெண்டு

27.பலவகையான கப்பல்களின் பெயர்களைக் குறிப்பிடும் நூல்
அ)கப்பல் சாத்திரம் ஆ)பதிற்றுப்பத்து
இ)பரிபாடல் ஈ)சேந்தன்திவாகரம்

28.பூம்புகார் துறைமுகத்தில் கப்பல்கள் மூலம் நடைபெற்ற ஏற்றுமதி, இறக்குமதியைக் கூறும் நூல்
அ)பட்டினப்பாலை ஆ)நெடுநல்வாடை
இ)சிலப்பதிகாரம் ஈ)பதிற்றுப்பத்து

29. 'இதழ்' என்பது
அ)திரிசொல் ஆ)திசைச்சொல்
இ)இயற்சொல் ஈ)வடசொல்

30.பாராளுமன்றத்தில் இவர் ஆங்கிலத்தில் பேசிய பேச்சு வெள்ளையர் காலத்தில் விட்டல்பாய், வல்லபாய் படேல் போன்ற மேதைகள் பேசிய பேச்சைப் போல் இருந்ததாக வட இந்திய இதழ்கள் யாரைப் பாராட்டின?

அ)காயிதே மில்லத் ஆ)அறிஞர் அண்ணா

இ)முத்துராமலிங்கத்தேவர் ஈ)இராஜாஜி

31.தவறானதைத் தேர்வு செய்க.

அ)அழகின் சிரிப்பு ஆ)பாஞ்சாலி சபதம்

இ)கண்ணகிபுரட்சிக் காப்பியம் ஈ)இசையமுது

32.விச்சை - இச்சொல்லின் பொருள் யாது?

அ)கடல் ஆ)கல்வி

இ)செல்வம் ஈ)பொருள்சேமித்து வைக்கும் இடம்

33.மனம் போல் வாழ்வு என்ற மொழிபெயர்ப்பு நூலின் ஆசிரியர் யார்?

அ)கண்ணதாசன் ஆ)ரா.பி.சேதுப்பிள்ளை

இ)நாமக்கல் கவிஞர் ஈ)சிதம்பரனார்

34.நாலடியார் பற்றிய தவறான கூற்றைத் தேர்வு செய்க.

1.சமண முனிவர் ஒருவரால் எழுதப்பட்டது.

2.பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று

3.நானூறு வெண்பாக்களைக் கொண்டது

4.நாலடி நானூறு, வேளாண்வேதம் என்றும் அழைக்கப்படும்.

5.அறம், பொருள், இன்பம்,வீடு என்னும் நான்கு பகுப்புகளைக் கொண்டது.

அ)இவற்றில் எதுவுமில்லை ஆ)1 மட்டும்

இ)5 மட்டும் ஈ)1,5

35.“வெள்ளத்தால் அழியாது வெந்தணலால்
வேகாது வேந்த ராலும்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும்
நிறைவன்றிக் குறைவு றாது” இவ்வடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

அ)புறப்பாடல் ஆ)தனிப்பாடல் திரட்டு

இ)கொன்றைவேந்தன் ஈ)பாரதிதாசன் கவிதைகள்

36.வாய்த்தீயின் - பிரித்து எழுதக் கிடைப்பது

அ)வாய் +தீயின் ஆ)வாய்த்து +ஈயின்

இ)வாய்த்து +தீயின் ஈ)வாய் +ஈயின்

**REVISION TEST BATCH STARTS ON 4/8/24 (SUNDAY)**

**FOR MORE DETAILS : WHATSAPP - 8438233722**

37.வள்ளுவர் உள்ளம், வள்ளுவர் காட்டிய வழி, சிந்தனைக் களஞ்சியம் ஆகிய நூல்களை எழுதியவர்
அ)தமிழ்செல்வன் ஆ)வீ.முனிசாமி
இ)ம.பொ.சி ஈ)முத்துராமலிங்கத்தேவர்

38.கனவு என்னும் இதழை நடத்தியவர்
அ)வீ.முனிசாமி ஆ)சே.பிருந்தா
இ)ராஜமார்த்தாண்டன் ஈ)சுப்ரபாரதிமணியன்

39.தமிழில் உள்ள ஓரெழுத்து ஒரு மொழிகளின் எண்ணிக்கை
அ)43 ஆ)42 இ)45 ஈ)47

40. 'நாடன்' என்பது
அ)வினைப்பகுபதம் ஆ)பெயர்ப்பகுபதம்
இ)பகாப்பதம் ஈ)பண்புப்பெயர்

41.காலத்தைக் காட்டும் பகுபத உறுப்பு
அ)பகுதி ஆ)விகுதி
இ)இடைநிலை ஈ)சந்தி

42.சரியான கூற்றுகளைத் தேர்வு செய்க
1.பழந்தமிழரின் வாழ்க்கை முறைகளை குகை ஓவியங்கள் மூலம் அறிந்துகொள்ளலாம்.
2.தஞ்சைப் பெரிய கோவிலில் சுவர் ஓவியங்களைக் காண முடியும்.
3.கலம்காரி ஓவியங்களை தமிழ்நாட்டிலும், ஆந்திராவிலும் வரைந்து வருகின்றனர்.
4.ஓலைச்சுவடி ஓவியங்கள் தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்தில் காணலாம்.
5.தந்த ஓவியங்களை கேரளாவில் அதிகம் காணலாம்.
அ)அனைத்தும் சரி ஆ)1,2,3,4 மட்டும் சரி
இ)1,3,4,5 மட்டும் சரி ஈ)2,3,4 மட்டும் சரி

43.எழுதெழில் அம்பலம் என்பது
அ)ஓவியம் ஆ)ஓவியம் வரைபவர்
இ)ஓவியச்சுவர் ஈ)ஓவியக்கூடம்

44.வள்ளுவர் கோட்டம் கட்டி முடிக்கப்பட்ட ஆண்டு
அ)1973 ஆ)1981 இ)1984 ஈ)1976

**REVISION TEST BATCH STARTS ON 4/8/24 (SUNDAY)**
**FOR MORE DETAILS : WHATSAPP - 8438233722**

45.கண்ணகியின் வரலாற்றை விளக்கும் நாற்பத்தொன்பது சிற்பத்தொகுதிகள் அமைக்கப்பட்டுள்ள இடம்
அ)தஞ்சாவூர் தமிழ்பல்கலைக்கழகம்
ஆ)உலகத்தமிழ் சங்கம், மதுரை
இ)சிற்பக்கலைக்கூடம், பூம்புகார்
ஈ)கன்னிமரா நூலகம்

46.துன்பத்திற்கே துன்பம் தருபவர் யார் என்று வள்ளுவம் கூறுகிறது?
அ)தம் குடியைச் சிறப்படையச் செய்பவர்
ஆ)சுற்றத்தாரோடு கூடி உண்பவர்
இ)ஒருவரின் பண்பறிந்து உதவி செய்பவர்
ஈ)துன்பத்தில் வருந்தாதவர்

47."பொன்திறந்து கொண்டு புகாவா நல்கினாள்
ஒன்றாகு முன்றிலோ இல்" இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல்
அ)மூதுரை ஆ)பழமொழி நானூறு
இ)கொன்றைவேந்தன் ஈ)அகநானூறு

48.துன்பக்கடல் - இலக்கணக் குறிப்பு யாது?
அ)உருவகம் ஆ)உவமைத்தொகை
இ)பண்புத்தொகை ஈ)வேற்றுமைத்தொகை

49.முன்றுரை அரையனார் காலம்
அ)பொ.ஆ.மூன்றாம் நூற்றாண்டு
ஆ)பொ.ஆ.நான்காம் நூற்றாண்டு
இ)பொ.ஆ.மு.நான்காம் நூற்றாண்டு
ஈ)பொ.ஆ.ஐந்தாம் நூற்றாண்டு

50.தவறான கூற்று எது/எவை?
1.திக்கெலாம் புகழுறும் திருநெல்வேலி என்று திருஞானசம்பந்தர் பாடியுள்ளார்.
2.கொற்கையில் பெருந்துறை முத்து என்று அகநானூற்றில் பாடப்பட்டுள்ளது.
3.பழந்தமிழர் பயன்படுத்திய முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்ட ஆதிச்சநல்லூர் திருநெல்வேலிக்கு அருகில் உள்ளது.
4.திருநெல்வேலியில் திங்கள் தோறும் திருவிழா நடைபெறும் என்பதை திருஞானசம்பந்தர் பாடியுள்ளார்.
5.நெல்லிக்காய் உற்பத்தியில் தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டமே முதலிடத்தில் உள்ளது.
அ)1,2 மட்டும் ஆ)4 மட்டும்
இ)3மட்டும் ஈ)இவற்றில் எதுவுமில்லை

TNPSC_PRE_COACHING